**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 141/2023 தேதி- 10.06.2026
(DW.1) – தங்கராஜ்

**குறுக்கு விசாரணை-**

1.இவ்வழக்கின் 1வது வாதி என்னுடைய சகோதிரி என்றால் சரிதான். என் வீட்டில் இருந்து எவ்வளவு தொலைவில் 1வது வாதி குடியிருந்துவருகிறார் என்றால் 3 முதல் 5 கி.மீ தொலைவில் குடியிருந்து வருகிறார். வழக்கு பட்டிகை சொத்து 1வது வாதியின் வீட்டில் இருந்து எத்தனாவது கண்டமாக அமைந்துள்ளது என்றால் 3 வது கண்டமாக அமைந்துள்ளது. 1வது வாதி திருமணம் செய்த பிறகு இந்து முறையில் கிறிஸ்தவ முறைக்கு மாறி பின்பற்றி வருகிறார் என்றால் சரிதான்.

2. 1வது வாதியின் கணவரின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் திருமணத்திற்கு பிறகு தெரியும். வழக்கு பட்டிகை சொத்தும், வேறு சொத்துக்களும் 1வது வாதியின் கணவருக்கு பூர்வீக சொத்தாகும் என்றால் சரிதான். தங்கப்பனின் அப்பாவின் பெயர் தங்கையன் என்றால் அவ்வாறு தான் சொல்வார்கள். வழக்கு பட்டிகை சொத்து 1வது வாதியின் கைவசம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, என் கைவசத்தில் தான் உள்ளது.

3. வழக்கு பட்டிகை சொத்தை நான் விலைக்கு வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில், அதற்கான அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இணையவழி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணம் என் கைவசத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அசல் ஆவணத்தை தாக்கல் செய்ததால் தான் ஆவணத்தில் யார் கையொப்பம் செய்தார்கள், யார் விலைக்கு கொடுத்தார்கள் என்ற விவரங்கள் பற்றி தெரியும் என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன்.

4. தங்கப்பனின் அப்பா இந்து முறைப்படி தான் வாழ்ந்து இறந்தார் என்றாலும், Hindu Sucession Act ன் அடிப்படையில் தான் ஆவணங்களை ஏற்படுத்த முடியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தங்கப்பன் இறந்த பிறகு அவருடைய சொத்துக்கள் தங்கபாய் மற்றும் அவருடைய நான்கு பிள்ளைகளுக்கு தான்

உரிமைப்பட்டது என்றால், தங்கப்பன் உயிரோடு இருக்கும் போதே எனக்கு விலை ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார். பி.வா.சா.ஆ.2 ஆவணமான நில வரிரசீது 10.06.2025 ல் பெறப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா 01.12.2025 ல் பெறப்பட்டது என்றால் சரிதான், இணையவழி மூலம் பெறப்பட்டதாகும்.

5. பி.வா.சா.ஆ.3 ஆன பட்டாவில் 1வது வாதியின் பெயர் தங்கபாயின் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான், தங்கபாயிக்கு வழக்கு பட்டிகை சொத்தின் பக்கத்தில் அவருக்கு உரிமைப்பட்ட கண்டம் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்து தங்கபாய் மற்றும் அவர் பிள்ளைகளின் கைவசத்தில் இருந்ததால் தான் 2025 க்கு முன்பு உள்ள பட்டா எதுவும் என் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் 2023 ல் தான் என் மகனுக்கு வீடு கட்ட முயற்சி செய்த போது வாதிகள் பிரச்சனை செய்தார்கள்.

6. வழக்கு பட்டிகை சொத்தில் 1/6 பங்கு தான் உரிமையுள்ளது என்றாலும், அதை மீறி ஆவணம் எழுதிக் கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் எவ்வளவு தொகைக்கு விலைக்கு வாங்கினேன் என்றால் சென்டிற்கு ரூ.10,000/- ஆக 1989 ல் விலைக்கு வாங்கினேன். மேற்சொன்ன ஒரு சென்டிற்கு ரூ.10,000/- கொடுத்தற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. ஒரு சென்டிற்கு ரூ.4850/- கொடுத்து ஏமாற்றி தான் விலைக்கு வாங்கினேன் என்றால் சரியல்ல. மற்ற வாரிசுகளை ஏமாற்றி தான் விலைக்கு வாங்கினேன் என்றால் சரியல்ல.

7. வழக்கு பட்டிகை சொத்தை 1வது வாதிக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் பாகம் பிரிக்க கூடாது என்பதால் தான் இந்த போலியான விலை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1989 ல் விலைக்கு வாங்கிய பிறகு 2023 வரை போக்கு வரவு செய்யாமல் இருந்து விட்டு 2023 ல் தான் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2023 போக்கு வரவு செய்த உடனே வாதிகள் என்னுடைய விலை ஆவணத்தை ரத்து செய்ய கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. 1வது வாதியின் கணவரான தங்கப்பனுக்கு உரிமைப்பட்ட 1/6 பங்கு சொத்தை தான் விலைக்கு கொடுக்க முடியும் என்றாலும், அதற்கு மேல் ஆவணத்தை ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. நான் வாங்கிய விலை ஆதாரம் செல்லாது என்றாலும், வாதியின் கணவரை ஏமாற்றி வாங்கியுள்ளதால் என்னுடைய விலை ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வாதியின் கணவரின் அப்பா இந்து என்பதால் Hindu Sucession Act முறைப்படி தான் சொத்துக்கள் பங்கு வைக்க முடியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.